**‘செயல்... அதுவே சிறந்த சொல்’ என்பார்கள். ஆழமான சிந்தனைக்குப் பின் வருவதே ஆற்றல்மிகு செயல். பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் சிந்தித்துச் செயல்படுத்தி, தமிழ்நாட்டின் மூலைமுடுக்குகளில் எல்லாம் அவர் உருவாக்கிச் சென்ற கட்டமைப்புகள் குறித்து வாரந்தோறும் இங்கு...**









# இடம் பொருள் கலைஞர் 20

# தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

## பெரும்பாய்ச்சல் கண்ட கல்வி!

“உனக்கு ஏன் இவ்வளவு அக்கறை? உலகத்தில் யாருக்கும் இல்லாத அக்கறை?”

1952-ஆம் ஆண்டில் வெளியான **‘பராசக்தி’** திரைப்படத்தில் இந்தத் தீப்பொறி வசனத்தை எழுதியிருந்தார் கலைஞர். காட்சிகள் மாறின. ஆட்சி அதிகாரம் கழகத்துக்கும், கலைஞரின் கைகளுக்கும் வந்தபோது, அவருக்கு முன் தலைக்கு மேல் செய்ய வேண்டிய பணிகளாக தமிழ்நாட்டின் முன்னேற்றம் நின்றது.

1967-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள், இனி நினைவுகளில் மட்டுமே நிற்பார் என்கிற நிலையில், 1969-ஆம் ஆண்டு முதலமைச்சராகப் பொறுப்பேற்கிறார் கலைஞர். அதன் பின்னர் அவர் செய்ததெல்லாம், அவர் 20 ஆண்டுகளுக்கு முன்பே எழுதிய எழுத்துகளைச் செயல் வடிவத்துக்குக் கொண்டு வரும் பரிசோதனை முயற்சிகள்தான். அப்படியான சோதனை முயற்சியும், மாபெரும் சாதனை முயற்சியுமாக உருவானதுதான் தமிழ்நாடுப் பாடநூல் நிறுவனம்.

பள்ளிகளுக்குத் தேவையான பாடநூல்களை அச்சிட்டு, விநியோகம் செய்வதற்காக 1970-ஆம் ஆண்டில், கலைஞர் முதலமைச்சராக இருக்கும்போது தனி நிறுவனமாக உருவாக்கப்பட்டதுதான், தற்போது செயல்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ்நாடுப் பாடநூல்கள் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம். இடையில், தமிழ்நாட்டுப் பாட நூல் கழகம் எனப் பெயர் மாற்றம் கண்டு, தற்போது மேற்கண்ட பெயரில் செயல்பட்டு வருகிறது.

### முறைப்படுத்தப்படாத பணிகள்

வேறு எதிலும்விட கல்விக் கட்டமைப்பில் அதிக கவனம் செலுத்தியது, முதல்முறையாகப் பொறுப்பேற்ற கழக ஆட்சி என்று சொன்னால் அது மிகையில்லை. ஆனால், பள்ளிகளுக்கு அனுப்ப வேண்டிய நூல்கள் தனியார் பதிப்பகங்கள் மூலம் அச்சிடப்பட்டு வந்ததுடன், விலை கொடுத்தும் வாங்க வேண்டி இருந்தது. மாணவர்களுக்குக் குறிப்பிட்ட நேரத்தில் பாடநூல்களைக் கொண்டு சேர்ப்பதிலும் எந்த ஒழுங்குமுறையும் அதுவரை கடைப்பிடிக்கப்பட வில்லை.



பள்ளிக்கூட பாடநூல்களைத் தனியார் விற்பனை நிலையங்களே விற்பனை செய்து வந்தன. அவர்களோ பாடநூல்களுக்குச் செயற்கையான தட்டுப்பாடுகளை உருவாக்கி, அதிக விலைக்கு விற்பனை செய்து வந்தனர். குறிப்பாக, பாடநூல்களை உருவாக்குவதில் எந்த கருத்தொற்றுமையும், கண்ணோட்டமும் அதுவரை இல்லை.

### கல்விப் பணிகள் கழகம்!

உயர்கல்வி தொடர்பான நூல்களை மொழிபெயர்க்கவும், மாணவர்களின் அறிவுத்திறனை மேம்படுத்தவும் 1961-ஆம் ஆண்டிலிருந்து தமிழ் வெளியீட்டுக் கழகம் செயல்பட்டு வந்தது. அதன் மூலம், பல அரிய நூல்கள் பதிப்பிக்கப் பட்டாலும், ஆரம்பக் கல்வி நூல்களோ, மேல்நிலைக் கல்வி வரையிலான நூல்களோ முறைப்படுத்தப்படவில்லை. அதை முறைப் படுத்தும் வேலைகளை முடுக்கினார் கலைஞர்.

**சென்னை பல்கலைக்கழகம், பள்ளி சாரா வயது வந்தோர் இயக்கம், தொல்லியல் துறை என பல அரசுப் பணிகளுக்குத் தேவையான நூல்களையும் அச்சடித்து வழங்கி வருகிறது.**

அனைவரும் எளிதாக அடையும் வண்ணம், சமமான தரமான கல்வி என்பது அரசின் இலக்கு. அதற்கு பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கையை உயர்த்துவது, பள்ளிக்குக் கட்டடங்களைக் கட்டுவது என பணிகள் ஒருபக்கம். மாணவர்களைப் பள்ளிக்குக் கொண்டுவருவதற்கு இலவசச் சீருடை, இலவசப் பாடநூல் என அடுத்தடுத்து இலக்குகளைத் தீர்மானித்தார். அது அரசின் கடமை என அறிந்தவர் கலைஞர்.

அதேபோல பாடத்திட்டத்தை முறைப்படுத்தவும் கல்வியாளர்கள் கொண்ட குழு உருவாக்கப்பட்டு பாடங்கள் தயாரிக்கப்பட்டன. கர்ம வீரர் காமராஜர் அவர்களின் கல்வி முன்னெடுப்புக்குப் பக்கபலமாக இருந்த நெ.து.சுந்தரவடிவேலு போன்ற கல்வியாளர்கள் கலைஞரின் எண்ணத்தை அறிந்து இணைந்து செயல்பட்டனர். இந்த நிறுவனத்துக்கென சென்னை நுங்கம்பாக்கத்தில் முறையாக இடம் ஒதுக்கப்பட்டு, கட்டடங்கள் எழுப்பப்பட்டன.

கணினி அறிவியல் குறித்த பாடத்தினை 1970-ஆம் ஆண்டிலேயே இந்த நிறுவனத்தின் மூலம் கொண்டு வரக் காரணமாக இருந்தவர் கலைஞர்.

கலைஞரின் எண்ண ஓட்டத்தை, கல்வி அமைச்சராக இருந்த நாவலர் இரா.நெடுஞ்செழியன் முதலில் செயல்படுத்தத் தொடங்கினார். என்றாலும், இனமானப் பேராசிரியர் கல்வித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற காலகட்டங்களில் எல்லாம் கல்வியியல் பணிகளின் வேகமும் அதிகரித்தது.

கலைஞர் நினைத்ததை, முடிக்கும் தோழமையாக பேராசிரியர் இருந்தார். தமிழ்நாட்டுக் கல்வி வரலாற்றில் கலைஞரின் வலது கரமாக மிகப்பெரிய வேலையை முன்னெடுத்துச் சென்றதால்தான், தற்போது நமது இனமானப் பேராசிரியர் அவர்களின் பெயர், கல்வி வளாகத்துக்குச் சூட்டப்பட்டுள்ளது.

### போர்க்காலப் பணிகள்

ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை தமிழ் மற்றும் ஆங்கில வழிப் பாடநூல்கள், சிறுபான்மை மொழிப் பாடநூல்கள், மேல்நிலைப் பள்ளிக்கான தொழிற்கல்விப் பாடப் புத்தகங்கள் ஆகியவற்றைத் தயாரிக்கும் பணியை இக்கழகம் செய்கிறது.

தவிர, சென்னை பல்கலைக்கழகம், பள்ளி சாரா வயது வந்தோர் இயக்கம், தொல்லியல் துறை என பல அரசுப் பணிகளுக்குத் தேவையான நூல்களையும் அச்சடித்து வழங்கி வருகிறது. பார்வைத்திறன் குறைபாடு கொண்டவர்களுக்கான பிரெய்லி நூல்களை அச்சடிக்கும் பணிகளையும் இந்த நிறுவனம் செய்து வருகிறது.

### அரிய நூல்களும் - மொழிபெயர்ப்பும்

**அறிவியல், இலக்கியம், மொழிபெயர்ப்பு, அரிய நூல்களின் மறுபதிப்பு, நூல்களை மின்மய மாக்குதல், சர்வதேசப் பதிப்பகங்களுடன் கூட்டு முயற்சி என பல தளங்களில் தனது பணிகளை இந்தக் கழகம் விரிவாக்கம் செய்துள்ளது.**

1960-ஆம் ஆண்டு முதல் 1970-ஆம் ஆண்டு வரை வெளியான பல அரிய நூல்களை தற்போது பதிப்பித்து விற்பனை செய்யும் பணிகளையும் செய்து வருகிறது. அந்த வகையில் சுமார் 635 அரிய பழைய நூல்களை அடுத்த தலைமுறை கவனத்துக்கு இந்தக் கழகம் கொண்டு வந்துள்ளது. ஆட்சிப் பணித் தேர்வுக்குத் தயாராகும் தமிழ்நாட்டு மாணவர்களுக்கு அந்த நூல்கள் மிகப்பெரும் சொத்தாகக் கையில் கிடைத்துள்ளன.

சிறந்த தமிழ் இலக்கிய நூல்களை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்து கொண்டு வரும் பணிகளும் நடக்கின்றன. ஐ.நா. மொழிகள் உள்ளிட்ட 22 மொழிகளில் தொல்லியல் துறையுடன் இணைந்து ‘கீழடி’ நகர நாகரிக நூலினையும் கொண்டு வந்துள்ளது. பாடநூல்களை அச்சிட்டு வழங்குவதற்கு என்று உருவான இந்த நிறுவனம், இன்று பல மடங்கு வேலைகளைச் செய்யும் கழகமாக வளர்ந்துள்ளது.

**...வலம் வருவோம்**

## :ப்ளாஷ்பேக்



### கருப்புக்கொடி நினைவுகள்!

கட்டாய இந்தித் திணிப்பை எதிர்த்து 1965-ஆம் ஆண்டு குடியரசு நாளை ‘துக்க நாளாக’ அறிவித்தது கழகம். தமிழ்நாடு முழுக்க கருப்புக்கொடி ஏற்றும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.



குளித்தலையில் கருப்புக் கொடியேற்றி விட்டு, ஊட்டி செல்லும் வழியில், கரூரில் தலைவர் கலைஞர் கைது செய்யப்பட்டார். அவருடன் கைதாகி ஒரு வாரம் திருச்சி சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு, 1965-ஆம் ஆண்டு பிப்ரவரி 2-ஆம் தேதி அன்று விடுவிக்கப்பட்டோம். அவருடன் கருப்புக் கொடியேற்றி கைதான நாங்கள் அனைவரும் அவருடன் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

**–சுப.இராசகோபால், தலைமைச் செயற்குழு உறுப்பினர், கரூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. வாட்ஸ்அப் எண்: 90033–24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

## ‘நீதி’யின் செங்கோல்!



குடிகளால் ஆளப்படும் அரசு, குடியரசு. சாமானிய மக்கள்தான் குடியரசில் மன்னர்கள். முடியரசின் எச்சமான செங்கோலை மக்களாட்சியின் குறியீடாக்கி கோமாளித்தனங்களைச் செய்துகொண்டிருக்கிறது பா.ஜ.க., தலைமையிலான ஒன்றிய அரசு.

செங்கோலைச் சுற்றி, பல்வேறு ‘வாட்ஸ்-அப்’ கட்டுக் கதைகள் காதில் சொருகப்பட்டுக் கொண்டிருக்கும் இந்நேரத்தில், நாம் கவனிக்க வேண்டிய முக்கியப் புள்ளியைச் சுட்டிக்காட்டியுள்ளார் ஓய்வுபெற்ற நீதிபதி கே.சந்துரு.

காலனிய நீதித்துறையின் எச்சமாக இன்றளவும் தொடரும் ‘சோப்தார்கள்’ (நீதிமன்றத்தில் நீதிபதி வரும்போது அவருக்கு முன்னே சென்று ‘உஸ் உஸ்’ என்று ஒலி எழுப்பி மக்கள் கூட்டத்தை விலக்கி, நீதிபதிக்குத் தடங்கலற்ற வழி ஏற்படுத்தித் தருபவர்) சுமக்கும் செங்கோலை விரும்பி, அதனை மீண்டும் செயல்படுத்த நீதியரசர் வி.ராமசாமி எடுத்த முயற்சிகளையும், அதனால் ஏற்பட்ட பொருட்செலவுகளையும், அவரை நீக்க மக்களவையில் நடைபெற்ற வாக்கெடுப்பையும், உச்சநீதிமன்றம் எதிர்வினையாற்றிய விதத்தையும் குறிப்பிட்டு, ‘ஒரு வலுவான ஜனநாயகத்தில், குறியீட்டு அதிகாரத்தை மட்டும் கொண்டிருக்கும் செங்கோலுக்கு அவசியமில்லை’ என்கிறார்.


உண்மையை ஒரு நாளும் கேட்கத் தயாரில்லாதவர்கள் காதுகளில் இது ஒலிக்கும் என்று நம்புவோமாக!

## கருவூலம்

### கலைஞரின் மரியாதை!

**1972-ஆம் ஆண்டு விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு தாமிரப் பத்திர விருது அளிக்கும் நிகழ்வு சென்னையில் நடைபெற்றது. நிகழ்வுக்கு வரமுடியாத சூழலில், தனக்கு வழங்கப்படும் தாமிரப் பத்திர விருதினை, அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொண்டார் ராஜாஜி. அந்த விருதினை கவர்னரிடமிருந்து பெற்ற முதலமைச்சர் கலைஞர், ராஜாஜி இல்லத்துக்குச் சென்று நேரில் வழங்கினார். ‘நம்முடைய நாட்டின் பண்பாட்டுடன் ஒட்டி நின்ற மரியாதை முறையை அறிந்தவர் கலைஞர்’ என ராஜாஜி பாராட்டினார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 135




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023. Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.